விவரங்கள் ஆகக்கடைசியாக
30 டிசம்பர் 2021 புதுப்பிக்கப்பட்டன

ASK Kopi Kakis
GOVERNMENT POLICIES MADE SIMPLE

People's Association

# என் வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றம் அடைந்திடலாம்



# வாழ்க்கைப் பயணத்தை மேம்படுத்துவோம்

நீங்கள் வாழ்க்கையின் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், சரியான ஆதரவும் உதவியும் கிடைத்தால் வாழ்க்கைப்பயணம் சுமுகமாக அமையும். திருமணம் செய்தல், குடும்பத்தைத் தொடங்குதல், வயதான பெற்றோர்களைப் பராமரித்தல், புதிய வேலை தேடுதல் அல்லது ஓய்வுக்காலத்திற்குத் திட்டமிடுதல் உள்ளிட்ட வாழ்க்கையின் அனைத்து கட்டங்களுக்கும் இது பொருந்தும்.

இந்தக் கையேடுகள் தொடரில், சுகாதாரப் பராமரிப்பு, குடியிருப்பு, வாழ்நாள் கற்றலும் வாழ்வாதாரமும் கல்வி போன்ற வாழ்க்கை விவகாரங்கள் தொடர்பான அரசாங்கக் கொள்கைகள், திட்டங்கள் பற்றிய மேலோட்டமான விவரங்களையும் குறிப்புகளையும் நீங்கள் காணலாம். வாழ்க்கையின் அடுத்த கட்டத்தைத் தொடங்கவும், எதிர்பாராத சவால்களைச் சமாளிக்கவும், முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் பொருத்தமான வாய்ப்புகளைக் கண்டறியவும் நீங்கள் நன்கு விவரமறிந்திருக்க இந்தத் தொடர் துணை புரியும்.

இந்தத் தொடரில் மூன்று கையேடுகள் உள்ளன:

என் குடும்பத்தைப் பராமரித்திடலாம்
என் வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றம் அடைந்திடலாம்
நம் மூத்தோரைப் பராமரிக்கிறோம்

**AKK கையேடுகளின் அண்மைப் பதிப்பை மக்கள் கழகத்தின் www.pa.gov.sg/akk! இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யுங்கள்!**

## காப்பி காக்கிகளிடம் கேளுங்கள்!

கென்னும் அவனது காக்கிகளும்* அன்பான புன்சிரிப்புக்கும் கலகலப்பான பேச்சுக்கும் அக்கம்பக்கம் முழுவதும் நன்கு அறியப்பட்டவர்கள். கென் அண்மை நடப்புகள் பற்றி அனைவருக்கும் உடனுக்குடன் தகவல் அளிப்பார். உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால், அவரிடம் சென்றால் போதும். அவர் நம்பகமானவர். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் தொடங்குவதற்கு உதவும் பயன்மிக்க தகவலையும் அறிவுரையையும் பெறுவதற்கான குறிப்புகளும் தொடர்புகளும் அவருக்குத் தெரியும். உங்களுக்குப் பயனளிக்கக்கூடிய அரசாங்கத் திட்டங்கள் பற்றியும் அவர் சுருக்கமாகவும் எளிமையாகவும் பகிர்ந்து கொள்வார்!




எல்லோரையும் போல, கென்னும் வாழ்க்கையில் சில பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறார். ஆனால், அவரது நம்பிக்கைக்குரிய காக்கிகளைப் போல, பல உதவும் கரங்கள் இருப்பதை அனுபவத்தின்மூலம் அவர் தெரிந்து கொண்டார். எங்கு சென்று, யாரிடம் கேட்பது என்பதை நீங்கள் தெரிந்து கொண்டாலே போதும். எனவே, உங்களுக்கு உதவியும் ஆதரவும் தேவைப்பட்டால், கென் அல்லது அவரது காக்கிகளிடம் கேளுங்கள்!

**காக்கிகள் - நல்ல நண்பர்களைக் குறிக்கும் பேச்சுவழக்குச் சொல்*

# உங்கள் பணி வாழ்வை ஒவ்வொரு கட்டத்திலும் நிர்வகித்திடுங்கள்


## 1 நீங்கள் மேற்கொள்ளக்கூடிய வாழ்க்கைத்தொழில்களை ஆராயுங்கள் Pg 4 - 6

- ஸ்கில்ஸ்ஃபியூச்சர்
- திறன்கள் கட்டமைப்பு
- "Career Starter" (வாழ்க்கைத் தொழில் ஆரம்பம்) திட்டம்

## 2 நீங்கள் வேலை தேட உதவி Pg 7 - 8

- MyCareersFuture
- திறனுக்கேற்ற பணியமர்த்தும் சேவைகள்
- எஸ்ஜி ஒற்றுமை வேலைகள் திறன்கள் திட்டத்தின் பணியமர்த்தும் பங்காளிகள் முனைப்பு

## 3 உங்கள் நிதிநிலையைக் கையாளுங்கள் Pg 10 - 14

- மத்திய சேம நிதியுடன் சேமிக்கலாம்
- படிப்படியான சம்பள உயர்வு முறை
- வேலைநலன் போக்குவரத்து சலுகை அட்டை

## 4 உங்கள் வாழ்க்கைத்தொழிலை அமைத்திடுங்கள் Pg 15 - 17

- வாழ்க்கைத்தொழில் மாற்றும் திட்டங்கள்
- வாழ்க்கைத்தொழில் மறுதொடக்கத் திட்டம்
- எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள்

## 5 காலத்திற்கு ஏற்ப உங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள் Pg 18 - 22

- ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி
- எஸ்ஜி ஒற்றுமை திறன்கள் திட்டம்
- ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியர் கல்வி நிதி

## 6 நமது சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கும் தொழில்நிறுவனங்களுக்கும் ஆதரவளிக்கிறோம் Pg 23 - 27

- அரசாங்க வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கான இணையவாசல்
- வேலை ஆதரவுத் திட்டம்
- மேம்படுத்தப்பட்ட பயிற்சி ஆதரவு தொகுப்புத்திட்டம்

## 7 வரி நிவாரணங்களும் மானியங்களும் Pg 28 - 31

- பெற்றோர் நிவாரணம் / தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / வாழ்க்கைத்துணை நிவாரணம்
- வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி
- மத்திய சேம நிதி ரொக்க நிரப்புத்தொகைக்கு நிவாரணம்




# நீங்கள் மேற்கொள்ளக்கூடிய வாழ்க்கைத்தொழில்களை ஆராயுங்கள்

## Pg 4 - 6



நீங்கள் மேற்கொள்ளக்கூடிய வாழ்க்கைத்தொழில்களை ஆராய்வதற்குத் துணை புரியும் ஆதரவு பற்றி இந்தப் பகுதி விவரமளிக்கிறது:


- ஸ்கில்ஸ்ஃபியூச்சர்
- திறன்கள் கட்டமைப்பு
- "Career Starter" (வாழ்க்கைத் தொழில் ஆரம்பம்) திட்டம்



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# உங்கள் வாழ்க்கைத்தொழிலுக்குத் திட்டமிடுங்கள்

*உங்களுக்குள்ள தெரிவுகளை ஆராய்ந்திடுங்கள்*




## ஸ்கில்ஸ்ஃபியூச்சர்: கல்வியையும் வாழ்க்கைத்தொழில் வழிகாட்டலையும் வலுப்படுத்துகிறது

- மாணவர்களும் வளர்ந்தவர்களும் கல்வியிலும் வாழ்க்கைத்தொழிலிலும் சிறந்த தெரிவுகளைச் செய்வதற்குத் தேவையான அறிவாற்றல், திறன்கள், பண்புகள் ஆகியவற்றைப் புகட்டும் விரிவான, அமைப்புமுறை சார்ந்த திட்டம் இது.

## திறன்கள் கட்டமைப்பு

- மாணவர்கள் திறன்கள் கட்டமைப்பைப் பயன்படுத்தி:
  1. படிக்க விரும்பும் கல்வித் துறையைத் தீர்மானிக்கலாம்.
  2. வேலைகளுக்கு விண்ணப்பம் செய்வதற்கு முன்பாக விவரமறிந்து வாழ்க்கைத்தொழிலைத் தேர்ந்தெடுக்கலாம்.
  3. வேலைக்கான விண்ணப்பங்களைத் தயாரித்து, நேர்காணல்களுக்குத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம்.

## ஸ்கில்ஸ்ஃபியூச்சர்: மேம்படுத்தப்பட்ட வேலை அனுபவப் பயிற்சிகள்

- தொழில்நுட்பக் கல்விக்கழகம், பலதுறைத் தொழில்கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள், பயன்மிக்க வேலை அனுபவப் பயிற்சி பெற்று, வேலையிடத்திற்குத் தயார்ப்படுத்திக்கொள்ள, தொழில்துறை பங்காளிகளுடன் கூட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## ஸ்கில்ஸ்ஃபியூச்சர் வேலை-கல்வி திட்டங்கள்

- உயர்கல்விக் கழகங்கள், ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர் நியமித்த தனியார் நிலையங்கள், தொழில்துறை ஆகியன வழங்கும் டிப்ளோமா முதல் மேல்நிலை டிப்ளோமா, பட்டப்படிப்பு வரையிலான கல்விகளை வேலை செய்துகொண்டே பயில்வதற்கு இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.skillsfuture.gov.sg/workstudy**
**www.skillsfuture.gov.sg/skills-framework**
**www.skillsfuture.gov.sg/enhancedinternships**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## “Career Starter” (வாழ்க்கைத் தொழில் ஆரம்பம்) திட்டம்

- தொழில்நுட்பக் கல்விக்கழகத்திலும் பலதுறைத் தொழில்கல்லூரியிலும் படிப்பை முடிக்கும் மாணவர்களின் வேலை தேடலுக்குத் திட்டவட்டமான ஆதரவு அளிக்கப்படும்.
- மாணவர்கள் “Career Starter” உதவித்தொகுப்பு வழிகாட்டியைப் பெறுவார்கள். அதோடு, வேலை தேடும் உத்திகளையும் திறன்களையும் வளர்த்துக்கொள்ள இருவழித்தொடர்பு பயிலரங்குகளில் பங்கெடுத்து, தனிப்பட்ட பயிற்றுவிப்பும் பெறுவார்கள்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.wsg.gov.sg**

## திறனாளர்களை உலகமயமாதலுக்குத் தயார்ப்படுத்தும் திட்டம்

- உயர்கல்விக் கழகங்களில் பயிலும் மாணவர்களும் இளம் சிங்கப்பூரர்களும் உலக அரங்கில் உன்னதமடைய, உள்நாட்டிலும் தென்கிழக்காசியா, சீனா, இந்தியா போன்ற வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்புகளும் வேலை அனுபவப் பயிற்சி வாய்ப்புகளும் கிடைக்கும்.
- சிங்கப்பூர் நிறுவனங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விரிவடைய ஆதரவளிக்கப்படும்.

**எண்டர்பிரைஸ் சிங்கப்பூர்: 6898 1800**
**www.beglobalready.gov.sg**

## எஸ்ஜி எனேபல் மாணவப் பயிற்சியாளர் திட்டம்

- பல்கலைக்கழகம், பலதுறைத் தொழில்கல்லூரி போன்ற உயர்கல்விக் கழகங்களில் தற்போது படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இத்திட்டம் வேலை அனுபவப் பயிற்சி வாய்ப்புகளை வழங்குகிறது.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 858 5885**
**http://employment.sgenable.sg**

## சிங்கப்பூரின் ஒருங்கிணைந்த பயிற்சி திட்டம்

- 2019 முதல் 2021 வரை தொழில்நுட்ப கல்வி நிறுவனம், பல்துறை கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற தனியார் கல்வி நிறுவனங்களில் பட்டம் பெற்ற அல்லது பட்டம் பெறப்போகும் மாணவர்கள், பொருளாதார மீட்சியின் போது மதிப்புமிக்க தொழில் அனுபவத்துடன் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும், வேலை சந்தையில் உறுதியான இடத்தைப் பெறவும் பயிற்சிகளைப் பெறலாம்.
- முன்னதாக பட்டம் பெற்று 2019 முதல் 2021 வரை தேசிய சேவையை முடித்தவர்களும் இதற்கு தகுதியானவர்கள்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.sgunitedtraineeships.gov.sg/trainees**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# நீங்கள் வேலை தேட உதவி
# Pg 7 - 8






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# உங்கள் வாழ்க்கைத்தொழிலைத் தொடங்கிடுதல்

*நீங்கள் வேலை தேட உதவி*




## திறனுக்கேற்ற பணியமர்த்தும் சேவைகள்

- வேலை தேடுவோர் தங்களது திறனுக்கேற்ற வேலைகளை அடையாளம் காணக்கூடிய இணையத்தளம் இது.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.mycareersfuture.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## திறனுக்கேற்ற பணியமர்த்தும் சேவைகள்

நீங்கள் வேலை தேடிக் கொண்டிருந்தால், மீண்டும் வேலைக்குச் செல்ல எண்ணினால், வாழ்க்கைத்தொழிலை மாற்றிக்கொள்ள நினைத்தால் அல்லது தற்போது வேலை செய்துகொண்டே நீண்டகால வாழ்க்கைத்தொழில் இலக்குகளை அடைய விரும்பினால், பின்வரும் நிலையங்களில் ஒன்றுக்கு வருகையளித்து வழிகாட்டுதலும் ஆலோசனையும் பெறலாம்:

- பாய லேபார், தெம்பனிஸ், உட்லண்ட்ஸ் வட்டாரங்களில் அமைந்துள்ளது, சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பின் வேலை இணைப்புகள்.
- என்டியுசி-யின் e2i நிலையங்களின் திறனுக்கேற்ற பணியமர்த்தும் சேவைகள் (முன்பதிவின் மூலம் மட்டுமே)
  - உங்கள் ஆர்வத்தை இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்: https://vcf.mycareersfuture.gov.sg/employment-help
- நடமாடும் வாழ்க்கைத்தொழில் இணைப்புக் கூடம்.
- 24 வீடமைப்பு வளர்ச்சிக் கழகக் குடியிருப்பு நகரங்களில் அமைந்திருக்கும் எஸ்ஜி ஒற்றுமை வேலைகள், திறன்கள் நிலையங்களில் வாழ்க்கைத்தொழில் தூதரிடம் நீங்கள் பேசலாம். எஸ்ஜி ஒற்றுமை வேலைகள், திறன்களுக்கான தொகுப்புத்திட்டத்தைப் பற்றி அவர்களிடம் விவரம் கேட்டறிந்து, நீங்கள் வேலை தேடத் தொடங்க வழிகாட்டும் குறிப்புகளையும் அறிவுரையையும் பெறலாம்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.wsg.gov.sg/career-services**

**வேலை நியமன, வேலைத்தகுதி கழகம்: 6474 0606**
**https://e2i.com.sg/app**

## எஸ்ஜி ஒற்றுமை வேலைகள் திறன்கள் திட்டத்தின் பணியமர்த்தும் பங்காளிகள் முனைப்பு

- வேலை தேடும் உள்நாட்டு மக்களின் பணியமர்வுக்குத் துணை புரிய Adecco எனும் தனியார் வேலை நியமன முகவையை அரசாங்கம் நியமித்திருக்கிறது. 40 வயதுக்கு மேலான ஊழியர்கள், அல்லது குறைந்தது ஆறு மாதங்களாக வேலை இல்லாதவர்கள், அல்லது இயலாமைகள் உள்ளவர்கள் ஆகியோரைத் திறனுக்கேற்ற வேலைகளில், வேலைப் பயிற்சித் திட்டங்களில், வேலை அனுபவத் திட்டங்களில் சேர்க்க இந்நிறுவனம் உதவி புரிகிறது.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.wsg.gov.sg/programmes-and-initiatives/sgunited-jobs-and-skills-placement-partners-initiative.html**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# உங்கள் நிதிநிலையைக் கையாளுங்கள்
# Pg 10 - 14



உங்கள் நிதிநிலையை மேலும் சிறந்த முறையில் கையாளுவதற்கான குறிப்புகளை இந்தப் பகுதியில் காணலாம்:

- மத்திய சேம நிதியுடன் சேமிக்கலாம்
- படிப்படியான சம்பள உயர்வு முறை
- வேலைநலன் போக்குவரத்து சலுகை அட்டை



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# உங்கள் நிதிநிலையைச் சரிவர நிர்வகித்திடுங்கள்

*சுகாதாரப் பராமரிப்பு, ஓய்வுக்காலம் மற்றும் இன்னும் பல குறிப்புகள்*

## மத்திய சேம நிதியுடன் சேமிக்கலாம்

### மத்திய சேம நிதி என்பது என்ன?

மத்திய சேம நிதி என்பது சிங்கப்பூரின் சமுதாயப் பாதுகாப்புத் திட்டமாகும். சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் ஆயுட்காலம் முழுவதும் கிடைக்கும் வழங்குதொகையுடன் ஓய்வுக்காலத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், சுகாதாரப் பராமரிப்புக்கும் வீட்டுக்கும் பணம் செலுத்துவதற்கும் இத்திட்டம் துணை புரிகிறது.

### வேலை செய்யும் பெரியவர்கள் தங்களது மத்திய சேம நிதி கணக்குகளில் எவ்வளவு சந்தா செலுத்துகிறார்கள்?

ஊழியர்கள், முதலாளிகள் இருவருமே மாதந்தோறும் மத்திய சேம நிதி சந்தா செலுத்துகிறார்கள். அதன் விவரங்களைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| ஊழியரின் வயது (ஆண்டுகள்) | 1 ஜனவரி 2016 முதலான சந்தா விகிதங்கள் ($750க்கு மேற்பட்ட மாதச் சம்பளங்களுக்கு) | | |
|---|---|---|---|
| | முதலாளி செலுத்துவது (சம்பளத்தில் விழுக்காடு) | ஊழியர் செலுத்துவது (சம்பளத்தில் விழுக்காடு) | மொத்தம் (சம்பளத்தில் விழுக்காடு) |
| 55 வயது மற்றும் அதற்கும் குறைவு | 17 | 20 | 37 |
| 55 வயதுக்கு மேல் - 60 வயது வரை | 13 | 13 | 26 |
| 60 வயதுக்கு மேல் - 65 வயது வரை | 9 | 7.5 | 16.5 |
| 65 வயதுக்கு மேல் | 7.5 | 5 | 12.5 |

சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 356 8300
www.iras.gov.sg

மத்திய சமே நிதிக் கழகம்: 1800 227 1188
www.cpf.gov.sg

சுகாதார அமைச்சு: 6325 9220
www.moh.gov.sg

மெடிஷீல்டு லைஃப்: 1800 222 3399
www.medishieldlife.sg



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# நாம் செலுத்தும் மத்திய சேம நிதி சந்தா எந்தெந்த கணக்குகளில் சேர்க்கப்படுகிறது?

| கணக்கின் வகை | சாதாரணக் கணக்கு | சிறப்புக் கணக்கு | மெடிசேவ் கணக்கு |
|---|---|---|---|
| வட்டி விகிதங்கள் | ஆண்டுக்கு 2.5%* | ஆண்டுக்கு 4%* | ஆண்டுக்கு 4%* |
| | • நீங்கள் 55 வயதுக்குக் குறைவானவராக இருந்தால் ஆண்டுக்கு 5% வரை வட்டி கிடைக்கும்.<br>• நீங்கள் 55 வயதும் அதற்கு மேலான வயதும் உடையவராக இருந்தால் ஆண்டுக்கு 6% வரை வட்டி கிடைக்கும். | | |
| பயன்பாடுகள் | ஓய்வுக்காலம், வீடு, காப்புறுதி, முதலீடு ஆகியவற்றுக்குப் பயன்படுத்தலாம் | முதுமைக் காலத்திற்கும் ஓய்வுக்காலத்திற்கான நிதித் திட்டங்களில் முதலீடு செய்வதற்கும் பயன்படுத்தலாம் | மருத்துவமனையில் தங்கும் செலவுகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் காப்புறுதிக்கும் பயன்படுத்தலாம் |
| | **நான் புதிதாக வாங்கும் வீட்டுக்கு மத்திய சேம நிதி சேமிப்பிலிருந்து எவ்வளவு பயன்படுத்த முடியும்?**<br>வீடு வாங்குவதற்கு எவ்வளவு மத்திய சேம நிதி சேமிப்பைப் பயன்படுத்த முடியும் என்பது சில காரணிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது:<br>• நீங்கள் வாங்கும் வீட்டின் வகை (புதிய வீவக வீடு / மறுவிற்பனை வீவக வீடு / தனியார் வீடு).<br>• வீட்டுக்குப் பணம் கட்டுவதற்குப் பயன்படுத்தும் வீட்டுக் கடனின் வகை (வீவக கடன் / வங்கிக் கடன்).<br>• மத்திய சேம நிதி சேமிப்பைப் பயன்படுத்தி வீடு வாங்கும் ஆக இளையவரின் 95 வயது வரையிலாவது நீடிக்கக்கூடிய வீட்டின் எஞ்சியுள்ள குத்தகைக்காலம்.<br>வீடு வாங்குவதற்கு நீங்கள் எவ்வளவு மத்திய சேம நிதி சேமிப்பைப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிய, கீழ்க்காணும் QR குறியீட்டை வருடுங்கள்: | **மத்திய சேம நிதி ஓய்வுக்காலத் தொகை நிரப்புத் திட்டம்**<br>• மாதந்தோறும் அதிக வழங்குதொகை பெறுவதற்காக மற்றும்/அல்லது வழங்குதொகை கிடைக்கும் காலக்கட்டத்தை நீட்டிப்பதற்காக, உங்களுடைய மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களுடைய ஓய்வுக்காலச் சேமிப்பைப் பெருக்குவதற்கு இத்திட்டம் உதவுகிறது.<br>• உங்களுடைய மற்றும்/அல்லது உங்கள் அன்புக்குரியவர்களுடைய சிறப்புக் கணக்கில் (55 வயதுக்குக் குறைவாக இருந்தால்) நடப்பிலுள்ள முழுத் தொகை வரை, அல்லது ஓய்வுக்காலக் கணக்கில் (55 வயதுக்கு மேலாக இருந்தால்) மேம்படுத்தப்பட்ட தொகை வரை ரொக்கமாகப் பணம் நிரப்புங்கள் அல்லது மத்திய சேம நிதி சேமிப்பை இடமாற்றம் செய்யுங்கள்.<br>• உங்களுடைய ($7,000 வரை) மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களுடைய ($7,000 வரை) சிறப்புக் கணக்கில் / ஓய்வுக்காலக் கணக்கில் ரொக்கமாகப் பணம் நிரப்பும்போது, ஒரு நாள்காட்டி ஆண்டில் அதிகபட்சம் $14,000 வரை வரி நிவாரணம் பெறலாம்.<br>*1 ஜனவரி 2022 முதல், நீங்கள் உங்களுடைய ($8,000 வரை), உங்கள் அன்புக்குரியவர்களுடைய ($8,000 வரை) சிறப்பு/ஓய்வுக்காலக் கணக்குகளில் ரொக்கமாகப் பணம் நிரப்பும்போது கிடைக்கும் வரி நிவாரணம் ஒரு நாள்காட்டி ஆண்டுக்கு $16,000 என மாற்றப்படுகிறது.* | **மெடிசேவ்**<br>• உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்குப் பணம் செலுத்த உதவுகிறது.<br>**மெடிஷீல்டு லை:ப்**<br>• வயது அல்லது உடல்நிலையைப் பொருட்படுத்தாமல், பெருமளவிலான மருத்துவக் கட்டணங்களிலிருந்து இத்திட்டம் பாதுகாப்பளிக்கிறது.<br>**ஒருங்கிணைந்த காப்புறுதித் திட்டம் (IP)**<br>• நீங்கள் தனியார் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவதற்கு இந்தக் காப்புறுதித் திட்டம் துணைக் காப்பளிக்கிறது (பொது அல்லது தனியார் மருத்துவமனைகளின் "A" மற்றும் "B1" படுக்கைப்பிரிவுகள் உள்ளடங்கும்) பாதுகாப்பளிக்கிறது.<br>• தனியார் காப்புறுதி நிறுவனம் வழங்கும் கூடுதலான தனியார் காப்புறுதியுடன் மெடிஷீல்டு லை:ப் திட்டத்தை ஒருங்கிணைக்கிறது.<br>• இந்தக் காப்புறுதித் திட்டத்திற்கான சந்தாவை, நடப்பிலுள்ள வரம்புகள் வரை, மெடிசேவ் பயன்படுத்தி செலுத்தலாம். அதற்கு மேலான தொகை ரொக்கமாகச் செலுத்தப்படவேண்டும்.<br>**கேர்ஷீல்டு லை:ப்**<br>• கடுமையான இயலாமை ஏற்பட்டு, நீண்டகாலப் பராமரிப்பு தேவைப்படும் நிலையில், இந்தக் காப்புறுதித் திட்டம் மாதந்தோறும் ரொக்க வழங்குதொகைகள் வழங்கும்.<br>**சம்பாதிப்பதற்கேற்ப சந்தா செலுத்தும் திட்டம் (CAYE)**<br>• சொந்தத் தொழில் செய்வோர் சம்பாதிப்பதற்கேற்ப மெடிசேவ் சந்தா செலுத்துவதற்கு இத்திட்டம் உதவுகிறது.<br>• இத்திட்டத்தின்கீழ் 2020, 2021 ஆண்டுகளில் மெடிசேவ் சந்தா செலுத்துவோர், ஈராண்டுகளுக்கும் மொத்தமாக, அதிகபட்சம் $600 வரையிலான இணைத்தொகையைத் தங்களது மெடிசேவ் கணக்குகளில் பெறுவார்கள். |




**மத்திய சேம நிதி கணக்குகளுக்கான தற்போதைய வட்டி விகிதங்கள். இந்த விகிதங்கள் காலாண்டுக்கு ஒருமுறை மறுஆய்வு செய்யப்படுகின்றன.*

# உங்கள் ஓய்வுக்காலத்திற்காக அதிகமாகச் சேமித்திடுங்கள்




### துணை ஓய்வூதியத் திட்டம் (SRS)

- மத்திய சேம நிதி கணக்குகளிலுள்ள சேமிப்புக்கு மேலாக, ஓய்வுக்காலத்திற்குக் கூடுதலாகச் சேமிப்பதற்கு ஒவ்வொருவரையும் ஊக்குவிக்கும் தன்விருப்பத் திட்டம் இது.
- துணை ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் செலுத்தும் சந்தா, வரி நிவாரணத்திற்குத் தகுதி பெறும்.

**சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 356 8300**
**www.iras.gov.sg**

# குறைந்த வருமானம் பெறும் மற்றும் வயது மூத்த ஊழியர்களுக்கு ஆதரவு




தொடர்ந்து வேலை செய்ய விரும்பும் வயது மூத்த ஊழியர்களுக்காக, 2030ஆம் ஆண்டுக்குள் ஓய்வுபெறும் வயது 62ல் இருந்து 65 ஆகவும், மறு வேலை நியமன வயது 67ல் இருந்து 70 ஆகவும் உயர்த்தப்படுகிறது. முதல் கட்டமாக, 1 ஜூலை 2022 முதல், ஓய்வுபெறும் வயது 63 ஆகவும், மறு வேலை நியமன வயது 68 ஆகவும் உயர்த்தப்படுகிறது.

### வேலைநலன் துணை வருமானத் திட்டம்

- தகுதிபெறும் ஊழியர்களும் சொந்தத் தொழில் செய்வோரும் வேலை செய்து, தங்களது மத்திய சேம நிதி சேமிப்பைப் பெருக்குவதற்கு ஊக்குவிப்பாக இத்திட்டம் ரொக்க வழங்குதொகைகளும் கூடுதல் மத்திய சேம நிதி சந்தாவும் வழங்குகிறது.
- தகுதிபெறும் ஊழியர்கள், வயதையும் வருமானத்தையும் பொறுத்து, ஓர் ஆண்டுக்கு $4,000 வரை பெறலாம். தகுதிபெறும் சொந்தத் தொழில் செய்வோர், ஓர் ஆண்டுக்கு $2,667 வரை பெறலாம்.

**வேலைநலன் துணை வருமானத் திட்டம்: 1800 227 1188**
**www.workfare.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## படிப்படியான சம்பள உயர்வு முறை

- திறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதன்மூலம் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கு இத்திட்டம் உதவுகிறது.
- தொடக்கமாக துப்புரவு, பாதுகாவல், தோட்டக்கலை துறைகளில் படிப்படியான சம்பள உயர்வு முறை தொடங்கப்பட்டது. இப்போது மின்தூக்கி மற்றும் மின்படிகள் துறைகளுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கூடிய விரைவில் கழிவு நிர்வாகம், உணவுச் சேவைகள், சில்லறை விற்பனை ஆகிய துறைகளுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**மனிதவள அமைச்சு: 6438 5122**
**https://www.mom.gov.sg/employment-practices/progressive-wage-model**

## வேலைநலன் திறன் ஆதரவுத் திட்டம்

- மாதத்திற்கு $2,300க்கு மேற்போகாத மொத்த வருமானம் பெறும் 35 வயதுக்கு மேலான தகுதிபெறும் குறைந்த வருமான ஊழியர்கள் தங்களது திறன்களை மேம்படுத்திக் கொண்டு, வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றம் அடைய இத்திட்டம் பயிற்சி ஆதரவு வழங்குகிறது.
- தகுதி பெறுவோர், தேர்ந்தெடுக்கப்பட்ட சான்றிதழ்களைப் பெற்று, குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றும்போது, பயிற்சிப் படித்தொகையும் பயிற்சிக் கடப்பாட்டு விருதும் பெறுவார்கள்.

**வேலைநலன் திறன் ஆதரவுத் திட்டம்: 1800 536 8333**
**www.workfare.gov.sg**

## வேலைநலன் போக்குவரத்து சலுகை அட்டை

- வேலைநலன் துணை வருமானம் பெறும் 60 வயதுக்குக் குறைவானவர்கள், வேலைநலன் போக்குவரத்து அட்டைக்கு விண்ணப்பித்து, பெரியவர்களுக்கான கட்டணத்திற்கு 25% வரையிலான தள்ளுபடியைப் பெறலாம்.
- வேலைநலன் போக்குவரத்து அட்டை வைத்திருப்பவர்கள், அடிப்படைப் பேருந்து சேவைகளிலும் இரயிலிலும் எண்ணற்ற பயணங்கள் செய்வதற்கான மாதச் சலுகையை $128 விலைக்கு வாங்கலாம்.
- வேலைநலன் துணை வருமானம் பெறும் 60 வயதுக்கு மேலானவர்கள், கூடுதல் சலுகைகளைப் பெற பேஷன் சில்வர் சலுகை அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**TransitLink: 1800 225 5663**
**www.transitlink.com.sg**






உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# உங்கள் வாழ்க்கைத்தொழிலை அமைத்திடுங்கள்

# Pg 15 -17



வணக்கம் கென், எங்கள் வாழ்க்கைத்தொழிலில் நாங்கள் வளர்ச்சியடைய உங்களால் வழிகாட்ட முடியுமா?




கண்டிப்பாக! இந்தப் பகுதியில், நீங்கள் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளவும், வாழ்க்கைத்தொழிலில் வளர்ச்சி அடையவும் உதவும் திட்டங்களைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளலாம்:

- வாழ்க்கைத்தொழில் மாற்றும் திட்டங்கள்
- வாழ்க்கைத்தொழில் மறுதொடக்கத் திட்டம்
- எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள்



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# உங்கள் வாழ்க்கைத்தொழிலை அமைத்திடுங்கள்

*மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்*

**வேலைகளின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப உங்களை மாற்றியமைத்துக்கொண்டு, வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றம் அடைய உதவி வழங்கும் ஆதரவுத் திட்டங்கள் உள்ளன. நீங்கள் புதிய வாழ்க்கைத்தொழிலை வளர்த்துக்கொள்ள, புதுத்திறன்களைக் கற்றுக்கொள்ளுங்கள்!**



## வாழ்க்கைத்தொழில் மாற்றும் திட்டங்கள்

பணியிடைக்கால ஊழியர்கள், புதிய வேலைகளுக்கு அல்லது துறைகளுக்கு மாறிச்செல்வதற்குப் புதிய திறன்களுடன் புதிய ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள இத்திட்டங்கள் வாய்ப்பளிக்கின்றன. திட்டங்களில் பின்வரும் வகைகள் உள்ளன:

- **வாழ்க்கைத்தொழில் மாற்றும் திட்டங்கள்**
  பணியிடைக்காலப் பட்டத்தொழிலர்கள், மேலாளர்கள், நிர்வாகிகள், தொழில்நுட்பர்கள் ஆகியோர், வளர்ச்சிகாணும் துறைகளில் புதிய வேலைகளில் சேர்வதற்கு, தொழில்துறை அங்கீகரிக்கும் திறன்களில் பயிற்சி பெறுவார்கள். இதில் மூன்று வகையான வாழ்க்கைத்தொழில் மாற்றும் திட்டங்கள் உள்ளன:
  - **பணியமர்த்தி பயிற்றுவிக்கும் திட்டம்**
    - பங்குபெறும் முதலாளியால் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பிறகு, புதிய வேலைப் பொறுப்பைச் செய்வதற்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படும்.
  - **வேலை அனுபவப் பயிற்சியளிக்கும் திட்டம்**
    - பணியமர்வுக்கு முன்பாக வேலை அனுபவப் பயிற்சி அளிக்கப்படும். எதிர்காலத்தில் நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய வளர்ச்சிகாணும் துறைகளில் உள்ள தொழில்துறை பங்காளிகள் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவார்கள்.
  - **மாற்றுவேலை / வேலைப்பொறுப்பு மாற்றியமைக்கும் திட்டம்**
    - தற்போதைய வேலை இல்லாமல் போகக்கூடிய அபாயம் இருந்தால், புதிய அல்லது மாற்றியமைக்கப்பட்ட வேலைப் பொறுப்புகளை ஏற்க தற்போதைய முதலாளிகள் திறன் பயிற்சி அளிப்பார்கள்.
- **சாதாரண ஊழியர்களுக்கான திட்டங்கள்**
  சாதாரண வேலைகளில் உள்ள ஊழியர்கள், புதிய அல்லது மேம்படுத்தப்பட்ட பொறுப்புகளை ஏற்பதற்கு மறுபயிற்சி பெறுவார்கள்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.wsg.gov.sg/programmes-and-initiatives/professional-conversion-programmes-individuals.html**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## வாழ்க்கைத்தொழில் முன்னோட்டத் திட்டம்

முழுநேர வேலைக்கு மாதத்திற்குக் குறைந்தது $1,500 சம்பளமும், பகுதிநேர வேலைக்கு $750 சம்பளமும் தரும் வேலைக்கு நீங்கள் பொருத்தமானவரா என்பதைக் கண்டறிய, குறுகியகால வேலை முன்னோட்ட அனுபவம் பெறலாம். இந்த வேலையில் நீங்கள் குறைந்தது 3 மாதங்களுக்கு நீடித்தால், கூடுதலாக ஊக்கத்தொகையும் கிடைக்கும்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.ssg-wsg.gov.sg/individuals/programmes-initiatives.html**

## வாழ்க்கைத்தொழில் மறுதொடக்கத் திட்டம்

- ஆட்குறைப்பு செய்யப்பட்ட சிங்கப்பூரர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பிச்செல்ல உதவும் நோக்கத்துடன் சிறப்பாகத் தொகுக்கப்பட்ட வளங்களை இத்திட்டம் வழங்குகிறது.
- காணொளிகள், கட்டுரைகள் போன்ற சுய உதவி வளங்கள், உதவித் திட்டங்கள், பயிலரங்குகள், தனிப்பட்ட முறையிலான வாழ்க்கைத்தொழில் பயிற்றுவிப்பு போன்றவை இதில் உள்ளடங்கும்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**https://go.gov.sg/restarter**

## எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள் - நிறுவன இணைப்புத் திட்டம்


- பணியிடைக்கால ஊழியர்கள் தொழில்துறைக்குத் தேவையான அனுபவத்தைப் பெற, 6 மாதகாலம் வரையிலான குறுகியகால இணைப்புத் திட்டங்களில் பங்கெடுத்து, புதிய திறன்களை வளர்த்துக் கொள்ளலாம். அதோடு, தங்களது நிபுணத்துவக் கட்டமைப்புகளை விரிவுபடுத்திக்கொண்டு, வேலைத்தகுதியையும் மேம்படுத்திக் கொள்ளலாம். மாதாந்தரப் பயிற்சிப் படித்தொகையாக $3,800 வரை கிடைக்கும்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.wsg.gov.sg/SGUnited.html**

## எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள் - நிறுவனப் பயிற்சித் திட்டம்

- பணியிடைக்கால ஊழியர்கள் நன்மதிப்புபெற்ற நிறுவனங்களிலும் சந்தை முன்னோடிகளிலும் பயிற்சி பெற்று, தொழில்துறைக்குத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்ளலாம். அவர்கள் மாதாந்தரப் பயிற்சிப் படித்தொகையாக $1,500 வரை பெறுவார்கள். பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதியைப் பயன்படுத்தலாம்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.wsg.gov.sg/SGUnited.html**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

ASK Kopi Kakis
GOVERNMENT POLICIES MADE SIMPLE

People's Association

# காலத்திற்கு ஏற்ப உங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள்

## Pg 18 - 22

உங்களது தற்போதைய வேலைக்காக அல்லது புதிய வாழ்க்கைத்தொழிலுக்காகப் புதுத்திறன்களுடன் உங்களை மேம்படுத்திக்கொள்ள இந்தப் பகுதி உங்களுக்கு வழிகாட்டும்:

- ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி
- எஸ்ஜி ஒற்றுமை திறன்கள் திட்டம்
- ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியர் கல்வி நிதி







உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# வாழ்நாள் கற்றலை வாழ்க்கைமுறையாக்கிக் கொள்ளுங்கள்

*காலத்திற்கு ஏற்ப உங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள்*




## ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி

- 25 வயதுக்கு மேலான சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் 2015ல் தொடக்கமாக $500 பயிற்சி உதவி நிதி வழங்கப்பட்டது (காலாவதி தேதி கிடையாது). வேலைத் திறனை வளர்த்துக்கொள்ள உதவும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி வகுப்புகளின் துணையுடன் தங்களது திறன் மேம்பாட்டுக்கும் வாழ்நாள் கற்றலுக்கும் சிங்கப்பூரர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள இந்த உதவி நிதி ஊக்கமளிக்கிறது.
- கற்றலைத் தொடர்வதற்கு ஆதரவாக, 31 டிசம்பர் 2020 தேதிப்படி 25 வயதுக்கு மேலான சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் 2020ல் மேற்கொண்டு $500 வழங்கப்பட்டது (31 டிசம்பர் 2025 காலாவதியாகும்).

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**https://www.skillsfuture.gov.sg/credit**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## பணியிடைக்கால வேலைக்கான ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்

பணியிடைக்கால வேலைக்கான ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஆதரவுத் தொகுப்புத்திட்டம், 40 முதல் 60 வயதுக்கு உட்பட்ட உள்ளூர் மக்கள் வாழ்க்கைத்தொழில் மாறுவதற்கு அதிகமான வாய்ப்புகளை உருவாக்கித் தந்து, அவர்கள் வேலையில் நிலைத்திருக்க உதவுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

- **புதுத்திறன் திட்டங்கள்**
  - பணியிடைக்கால ஊழியர்களுக்காக, தொடர் கல்வி, பயிற்சி (CET) நிலையங்கள் இன்னும் அதிகமான வாழ்க்கைத்தொழில் மாற்றும் பயிற்சித் திட்டங்களையும் பணியமர்த்தி பயிற்றுவிக்கும் திட்டங்களையும் நடத்தும். அதோடு, துறை சார்ந்த பயிற்சித் திட்டங்களும் அதிகரிக்கப்படும்.
- **கூடுதலான ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி (பணியிடைக்கால ஆதரவு)**
  - 31 டிசம்பர் 2020 தேதியில் 40 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டிருந்த சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் 2020ல் ஒருமுறை மட்டும் கூடுதலாக $500 ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி வழங்கப்பட்டது. CET நிலையங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதுத்திறன் பயிற்சித் திட்டங்களில் கலந்துகொள்ள இந்நிதியைப் பயன்படுத்தலாம். கூடுதல் நிதி 31 டிசம்பர் 2025 அன்று காலாவதியாகிவிடும்.
- **வாழ்க்கைத்தொழில் ஆலோசகர்கள்**
  - சிங்கப்பூரர்கள் தங்களது வாழ்க்கைத்தொழில் பாதைகளை வகுப்பதற்கு உதவியாக, சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பால் நியமிக்கப்பட்ட தொழில்துறை நிபுணர்கள் ஆதரவும் ஆலோசனையும் அளிப்பார்கள்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.go.gov.sg/vcai-app**

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.skillsfuture.gov.sg**

## எஸ்ஜி ஒற்றுமை திறன்கள் திட்டம்

- ஆறு மாதங்கள் வரை நீடிக்கும் முழுநேரப் பயிற்சித் திட்டம் இது. நிறுவனங்களும் உயர்கல்விக் கழகங்கள் உள்ளிட்ட CET நிலையங்களும் நடத்தும் தொழில்துறைக்குத் தேவையான, சான்றிதழ் வழங்கப்படும் பயிற்சி வகுப்புகள் இதில் உள்ளடங்கும்.
- பயிற்சியாளர்கள் ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதியைப் பயன்படுத்தலாம். அதோடு, மாதத்திற்கு $1,200 பயிற்சிப் படித்தொகையும் பெறலாம்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.skillsfuture.gov.sg/sgunitedskills**

## மை ஸ்கில்ஸ்ஃபியூச்சர்

- சிங்கப்பூரர்கள் கற்றல் தெரிவுகளும் வாழ்க்கைத்தொழில் தெரிவுகளும் செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் இந்த இணையத்தளம் வழங்குகிறது. இதனைப் பயன்படுத்தி, வாழ்நாள் முழுவதும் திறன்களை மேம்படுத்திக்கொண்டு வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றம் அடையலாம்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.MySkillsFuture.gov.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## திறன்கள் மற்றும் பயிற்சி ஆலோசனை சேவைகள்

- உங்களது வாழ்க்கைத்தொழில் இலக்குகளுக்கு, மாற்றத்திற்கு, அல்லது முன்னேற்றத்திற்குத் தேவையான திறன்களையும் பயிற்சிகளையும் நீங்கள் அடையாளம் காண, 30 முதல் 45 நிமிடத்திற்குத் தனிப்பட்ட முறையில் இலவச ஆலோசனை வழங்கப்படும்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.go.gov.sg/myskillsfuture-sta**

## ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஆலோசனைத் திட்டம்

- வாழ்க்கைத்தொழில் திட்டமிடல், திறன் மேம்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். அதோடு, உங்களது திறன்களையும் வாழ்க்கைத்தொழிலையும் மேம்படுத்திக்கொள்ள ஆதரவளிக்கும் பல்வேறு அரசாங்கத் திட்டங்கள் பற்றியும் மேலும் தெரிந்து கொள்ளலாம்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.skillsfuture.gov.sg/advice**

## மின்னிலக்க வேலையிடத்திற்கான ஸ்கில்ஸ்ஃபியூச்சர்

- இந்த இரண்டு நாள் $50 பயிற்சித் திட்டம், அடிப்படை மின்னிலக்க அறிவுத்திறன்களைக் கற்றுக்கொடுத்து, மின்னிலக்கப் பொருளியலில் மலிந்திருக்கும் வாய்ப்புகளைச் சாதகமாக்கிக்கொள்ள ஊக்கமளிக்கும்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.skillsfuture.gov.sg/digitalworkplace**

## ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியர் கல்வி நிதி

- வாழ்க்கைத்தொழிலின் ஆரம்பம் முதல் இடைக்காலக் கட்டங்களில் இருக்கும் சிங்கப்பூரர்கள் தங்களது திறன்களை மேலும் வளர்த்துக்கொள்ள உதவியாக $5,000 கல்வி நிதி வழங்கப்படுகிறது.

## ஸ்கில்ஸ்ஃபியூச்சர் வல்லுநர் ஆதரவுத் திட்டம்

- பணியிடைக்காலத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சிங்கப்பூர் குடிமக்களுக்கு $10,000 ரொக்க நிதி வழங்கப்படுகிறது. அவர்கள் தத்தம் துறைகளில் வல்லமை பெற உதவும் கல்விக்கும் பயிற்சிக்கும் நிதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## மேம்படுத்தப்பட்ட ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பணியிடைக்கால உதவி நிதி

- 40 வயதுக்கு மேற்பட்ட சிங்கப்பூரர்கள், கல்வி அமைச்சு நிதியளித்து, ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர் ஆதரவளிக்கும் பயிற்சித் திட்டங்களின் கட்டணத்திற்கு 90% வரை அதிக உதவி நிதி பெறுவார்கள்.

## ஸ்கில்ஸ்ஃபியூச்சர் தேர்ச்சித் தகுதி விருது

- ஊழியர்கள் முழு WSQ தேர்ச்சித் தகுதி பெற ஊக்குவிப்பாக $200 முதல் $1000 வரையிலான ரொக்க விருது வழங்கப்படுகிறது. இந்தத் தேர்ச்சித் தகுதியுடன், ஊழியர்கள் தங்கள் வேலையைத் திறம்படச் செய்வதற்கு உதவும் திறன்களைப் பெறுவார்கள்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.skillsfuture.sg**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## உடற்குறையாளர் துறையில் பணிபுரியும் பட்டத்தொழிலர்களுக்கான ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியர் கல்வி நிதி

- உடற்குறை உள்ளவர்களுக்கும் முதலாளிகளுக்கும் தரமான சேவை வழங்கும் வகையில் பட்டத்தொழிலர்கள் இந்த நிதியைப் பயன்படுத்தி தங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.

## உடற்குறை உள்ளவர்களுக்கான ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஊழியர் கல்வி நிதி

- உடற்குறை உள்ளவர்கள் தேவையான ஆற்றல்களையும் திறன்களையும் வளர்த்துக்கொண்டு வேலைத்தகுதியை மேம்படுத்திக்கொள்ள $5,000 வரையிலான கல்வி நிதி வழங்கப்படுகிறது.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**www.skillsfuture.sg**

## உடற்குறை உள்ளவர்களுக்கான எஸ்ஜி ஒற்றுமை வேலைகள், திறன்கள் திட்டங்கள்

- மூன்று திட்டங்களுடன் உடற்குறை உள்ளவர்களுக்கு வேலை, பயிற்சி, திறன் மேம்பாட்டு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன:
  - பணியமர்த்தி பயிற்சியளிக்கும் திட்டம்: உடற்குறை உள்ளவர்கள் முதலாளிகளிடம் பணியமர்த்தப்படுவார்கள். புதிய முழுநேர வேலைகளை அல்லது ஒப்பந்தக்கால வேலைகளைச் செய்ய அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். முதலாளிகள் அரசாங்கத்திடமிருந்து 90% சம்பள ஆதரவு பெறுவார்கள்.
  - வேலை அனுபவப் பயிற்சித் திட்டம்: உடற்குறை உள்ளவர்களுக்கு நிறுவனங்களில் வேலை அனுபவப் பயிற்சி அளிக்கப்படும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் படித்தொகைக்கு அரசாங்கம் மானியம் வழங்கும்.
  - திறன் மேம்பாட்டுத் திட்டம்: உடற்குறை உள்ளவர்கள் தங்களது திறனை வளர்த்துக்கொள்ள தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளலாம். பயிற்சிபெறும் காலக்கட்டத்திற்கு மாதந்தோறும் படித்தொகை வழங்கப்படும்.

**எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம்: 1800 8585 885**
**www.employment.sgenable.sg/employers/open-door-programme**



உடற்குறை உள்ளவர்களுக்கான பல்வேறு வகையான ஆதரவு பற்றி மேலும் தெரிந்துகொள்ள, நாடுங்கள்:
http://employment.sgenable.sg
அல்லது மின்னஞ்சல்:
employment@sgenable.sg


உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# நமது சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கும் தொழில்நிறுவனங்களுக்கும் ஆதரவளிக்கிறோம்

Pg 23 - 27



நமது சிறிய, நடுத்தர நிறுவனங்களும் தொழில்நிறுவனங்களும் தங்களது தொழில் ஆற்றலை மேம்படுத்திக்கொள்ள ஆதரவளிக்கும் திட்டங்களைப் பற்றி இந்தப் பகுதியில் தெரிந்து கொள்ளுங்கள்:

- அரசாங்க வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கான இணையவாசல்
- வேலை ஆதரவுத் திட்டம்
- மேம்படுத்தப்பட்ட பயிற்சி ஆதரவு தொகுப்புத்திட்டம்



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# நமது சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கும் தொழில்நிறுவனங்களுக்கும் ஆதரவளிக்கிறோம்

## சிறிய, நடுத்தர நிறுவன (SME) நிலையங்கள்

- தொழில்நிறுவன உரிமையாளர்களுக்காக சிங்கப்பூரின் பல்வேறு வட்டாரங்களில் 5 SME நிலையங்களும் 6 துணை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களில் அனுபவமிக்கத் தொழில் ஆலோசகர்களிடம் இலவச அறிவுரை நாடலாம், உதவித் திட்டங்களின் தொடர்பில் வழிகாட்டுதல் பெறலாம், ஆற்றலை வளர்க்கும் பயிலரங்குகளிலும் குழு அடிப்படையிலான மேம்பாட்டுத் திட்டப்பணிகளிலும் கலந்துகொள்ளலாம்.

**எண்டர்பிரைஸ் சிங்கப்பூர்: 6898 1800**
**www.enterprisesg.gov.sg**

## அரசாங்க வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கான இணையவாசல்

- இந்த இணையவாசல், தொழில்நிறுவன உரிமையாளர்களைப் பல்வேறு அரசாங்க மின்-சேவைகள், வளங்கள் ஆகியவற்றுடன் இணைக்கிறது. எடுத்துக்காட்டாக, தொழில்நிறுவனத்தைப் பதிவு செய்ய விண்ணப்பம் செய்தல், உரிமங்களுக்கும் மானியங்களுக்கும் விண்ணப்பம் செய்தல், மின்-ஆலோசகர்களிடம் தொழில் தொடர்பாகத் தனிப்பட்ட உதவியும் பரிந்துரைகளும் பெறுதல் போன்றவை.

**www.gobusiness.gov.sg**

## வேலைப்பொறுப்பு மாற்றியமைப்புத் திட்டம்

- நிறுவனங்கள் தொழில்முறைகளையும் ஒட்டுமொத்த செயலாற்றலையும் மேம்படுத்திக்கொள்ள, துறை சார்ந்த தீர்வுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- முதலாளிகள் உயர் பணிகளை ஏற்கும் வகையில் புதுத் திறன்களைக் கற்றுக்கொள்ளலாம்.

**சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு: 6883 5885**
**www.ssg-wsg.gov.sg/employers/job-redesign.html**





உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## தொழில்நிறுவன மேம்பாட்டு மானியம்

- தொழில்நிறுவனங்கள் மூன்று முக்கிய அடிப்படைகளின்கீழ் தொழில்முறை ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ள, புத்தாக்கம் செய்ய அல்லது வெளிநாட்டில் விரிவடைய இந்த மானியம் உதவுகிறது:
  - மூல ஆற்றல்கள் - அடிப்படை செயல்பாடுகளுக்கு அப்பால் தங்கள் தொழிலின் மூல அடிப்படைகளை வலுவாக்க தொழில்நிறுவனங்கள் உதவி பெறலாம்.
  - புத்தாக்கமும் உற்பத்தித்திறனும் - வளர்ச்சி அடைவதற்கான புதிய வழிகளை ஆராய்வதற்கு, அல்லது செயலாற்றலை மேம்படுத்துவதற்கு நிறுவனங்கள் உதவி பெறலாம்.
  - அனைத்துலகமயமாக்கம் - வெளிநாடுகளில் விரிவடைய தயாராக இருக்கும் நிறுவனங்கள் ஆதரவு பெறலாம்.
- தகுதிபெறும் நிறுவனங்கள் 31 மார்ச் 2022 வரை 80% வரை ஆதரவு பெறலாம்.
- தொழிற்சங்கத்தில் சேர்ந்திருக்கும் தொழில்நிறுவனங்களும் தொழிலாளர் இயக்கத்தின்கீழ் இடம்பெறும் e2i பங்காளிகளும், கூடுதலாக 10% நிதியளிப்புக்குத் தகுதி பெறலாம். இது என்டியுசி-e2i அங்கீகரிப்புக்கு உட்பட்டது.

**எண்டர்ப்பிரைஸ் சிங்கப்பூர்: 6898 1800**
**www.enterprisesg.gov.sg**

## சிறிய, நடுத்தர நிறுவனங்கள் மின்னிலக்கமயமாதல் திட்டம்

- சிறிய, நடுத்தர நிறுவனங்கள் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மின்னிலக்க ஆற்றலை வளர்த்துக்கொண்டு, மின்னிலக்கப் பொருளியலில் அதிகரித்துவரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள இத்திட்டம் உதவுகிறது.

**தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம்: 6377 3800**
**www.imda.gov.sg**

## குடியிருப்பு வட்டாரங்கள் மின்னிலக்கமயமாதல் திட்டம்

- குடியிருப்பு வட்டாரங்களில் உள்ள சில்லறை விற்பனைக் கடைகளும், உணவு, பானத் தொழில்நிறுவனங்களும் மின்னிலக்கப் பயணத்தைத் தொடங்குவதற்கு உதவியாகக் கட்டுப்படியாகும் தீர்வுகளை இத்திட்டம் வழங்குகிறது.

**என் வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றம் அடைந்திடலாம்: 6741 3429**
**www.enterprisesg.gov.sg/hgd**




கொவிட்-19 நிலவரத்தால் பல தொழில்களும், வேலைகளும், வாழ்வாதாரங்களும் பாதிப்படைந்துள்ளன. இந்தக் காலக்கட்டத்தில் நிவாரணமும் நிதி ஆதரவும் வழங்கும் பின்வரும் திட்டங்களின்வழி பாதிப்படைந்த சிங்கப்பூரர்கள் பயனடையலாம்.

## வேலை ஆதரவுத் திட்டம்

- பொருளியல் நிச்சயமின்மை நிலவும் இந்தக் காலக்கட்டத்தில், உள்ளூர் ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்ள இத்திட்டம் முதலாளிகளுக்குச் சம்பள ஆதரவு வழங்குகிறது.
- ஒவ்வோர் உள்ளூர் ஊழியருக்கும் தரப்படும் மொத்த மாதச் சம்பளத்தின் முதல் $4,600 தொகையில் ஒரு பகுதிக்கு அரசாங்கம் இணை நிதி அளிக்கிறது.
- ஒவ்வோர் ஊழியருக்கும் எவ்வளவு காலத்திற்கு எவ்வளவு இணை நிதி கிடைக்கும் என்பது, அந்த ஊழியர் வேலை செய்யும் துறையைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது.

**சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 352 4728**
**https://www.iras.gov.sg/irashome/Schemes/Businesses/Jobs-Support-Scheme--JSS-/**

## வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத் திட்டம்

- அதிகமான உள்ளூர் மக்களை வேலைக்குச் சேர்க்கவும், அவர்களுக்காக நல்ல, நீண்டகால வேலைகளை உருவாக்கவும் இத்திட்டம் முதலாளிகளுக்கு ஆதரவளிக்கிறது. தகுதிபெறும் உள்ளூர் மக்களை 2020 செப்டம்பர் மாதத்திற்கும் 2022 மார்ச் மாதத்திற்கும் இடையில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் முதலாளிகள், ஒவ்வோர் ஊழியருக்கும் $15,000 வரை பெறலாம். வயது மூத்த ஊழியர்கள், உடற்குறை உள்ளவர்கள், முன்னாள் குற்றவாளிகள் ஆகியோரை வேலைக்குச் சேர்த்துக் கொள்வோர், 1 மார்ச் 2021 முதல், ஒவ்வோர் ஊழியருக்கும் $54,000 வரை பெறலாம்.

**சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 352 4728**
**www.iras.gov.sg/irashome/Schemes/Businesses/Jobs-Growth-Incentive--JGI-/**

## சம்பள உதவித்தொகை திட்டம்

- சிங்கப்பூர் ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பள உயர்வுக்கு 15% இணை நிதி வழங்குவதன்மூலம் இத்திட்டம் முதலாளிகளுக்கு ஆதரவளிக்கிறது. இதன்வழி, அதிகரிக்கும் ஊழியர் செலவுகளை நிறுவனங்கள் சமாளிக்க இயலும். அதோடு, உற்பத்தித்திறனை மேம்படுத்தும் முனைப்புகளில் முதலீடு செய்வதற்கும் நிதி பயன்படும்.

**சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 352 4728**
**https://www.iras.gov.sg/irashome/Schemes/Businesses/Wage-Credit-Scheme--WCS-/**



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## உடற்குறை உள்ளோருக்கான வேலை நியமன உதவித் தொகை

- உடற்குறை உள்ளவர்களின் வேலை நியமனத்திற்கு ஆதரவளிக்க, 20% வரை சம்பள உதவித் தொகை வழங்குகிறது.
- ஆறு மாதங்களாக வேலை இல்லாதிருந்த உடற்குறை உள்ளவர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் முதலாளிகள், அவர்கள் வேலை செய்யும் முதல் ஆறு மாதங்களுக்குக் கூடுதலாக 10% சம்பள உதவித் தொகை பெறுவார்கள்.

## மேம்படுத்தப்பட்ட பயிற்சி ஆதரவு தொகுப்புத்திட்டம்

- கொவிட்-19 கிருமிப்பரவலால் நேரடியாகப் பாதிப்படைந்த துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள், ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூரால் நியமிக்கப்பட்ட பயிற்சிப் பங்காளிகள் நடத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட துறை சார்ந்த பயிற்சித் திட்டங்களுக்கு ஊழியர்களை அனுப்பி வைப்பதற்கு இத்திட்டம் ஆதரவளிக்கிறது.
- இத்திட்டத்தின்வழி, ஊழியர்கள் தங்கள் துறைக்குத் தேவையான புதிய திறன்களை வளர்த்துக்கொண்டு முன்னுரிமை பெறுவார்கள். அதே சமயத்தில், நிறுவனங்கள் 90% வரை பயிற்சிக் கட்டண மானியமும், பயிற்சிக்காக வேலைக்குச் செல்லாதோருக்கான சம்பளமாக மணிநேர அடிப்படைச் சம்பளத்தில் 80% வரை நிதி உதவியும் பெறுவார்கள்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்: 6785 5785**
**https://www.ssg.gov.sg/ETSP_EnhancedAP.html**

## உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம்

- நிறுவனங்கள் தொழில்நுட்பத் தீர்வுகளையும் சாதனங்களையும் பயன்படுத்தி உற்பத்தித்திறனையும் தொழில் முறைகளையும் மேம்படுத்த இந்த மானியம் உதவுகிறது.
- தகுதிபெறும் நிறுவனங்கள் 31 மார்ச் 2022 வரை அதிகபட்சம் 80% வரையிலான ஆதரவைப் பெறலாம்.

## தொழில்நிறுவனங்களுக்கான ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி

- நிறுவன ஆற்றலை மேம்படுத்தி, ஊழியர் அணியை உருமாற்றும் திட்டங்களில் முதலீடு செய்வதற்காகும் செலவில் 90% வரை ஈடுசெய்ய ஒருமுறை மட்டும் $10,000 உதவி நிதி வழங்கி, தகுதிபெறும் முதலாளிகளுக்கு ஆதரவளிக்கப்படும்.

**எண்டர்பிரைஸ் சிங்கப்பூர்: 6898**
**1800www.enterprisesg.gov.sg**

ASK Kopi Kakis GOVERNMENT POLICIES MADE SIMPLE

People's Association


# வணக்கம் கென், எங்களைப் போன்ற வேலை செய்யும் பெற்றோர்களுக்கு என்ன ஆதரவு இருக்கிறது?

Pg 28 - 29

வணக்கம் கென், எங்களைப் போன்ற வேலை செய்யும் பெற்றோர்களுக்கு என்ன ஆதரவு இருக்கிறது?

நீங்கள் தகுதி பெறக்கூடிய வரி நிவாரணங்கள், மானியங்கள் பற்றி இந்தப் பகுதியில் தெரிந்து கொள்ளுங்கள்:

- பெற்றோர் நிவாரணம் / தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / வாழ்க்கைத்துணை நிவாரணம்
- வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி
- மத்திய சேம நிதி ரொக்க நிரப்புத்தொகைக்கு நிவாரணம்







உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

# கூடுதல் ஆதரவை அனுபவிக்கலாம்

*வரி நிவாரணங்களும் மானியங்களும்*

## பெற்றோருக்கான நிவாரணம் / உடற்குறையுள்ள பெற்றோருக்கான நிவாரணம்

- தனது பெற்றோர், தாத்தா பாட்டி, வாழ்க்கைத் துணையின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி ஆகியோரை ஆதரிக்கும் தனிநபர்கள், $5,500 அல்லது $9,000 வரி நிவாரணம் கோரலாம். தங்களைச் சார்ந்திருப்பவருக்கு உடற்குறை இருந்தால், $10,000 அல்லது $14,000 வரி நிவாரணம் கோரலாம். தனிநபர்கள் ஒப்பந்தத்தின் பேரில் வரி நிவாரணத்தைப் பகிர்ந்து கொள்ளலாம்.

## தகுதிபெறும் பிள்ளை நிவாரணம் / உடற்குறையுள்ள பிள்ளை நிவாரணம்

- 16 வயதுக்குக் குறைவான அல்லது முழுநேரமாகப் படிக்கும், $4,000க்கு மேற்போகாத ஆண்டு வருமானம் பெறும் ஒவ்வொரு பிள்ளைக்கும் $4,000 வரி நிவாரணம் கோரலாம். உடற்குறையுள்ள பிள்ளையை ஆதரிக்கும் பெற்றோர்கள், ஒவ்வொரு பிள்ளைக்கும் $7,500 வரி நிவாரணம் பெறலாம்.
- வாழ்க்கைத்துணைகள் தங்களுக்கு இடையிலான விகித ஒப்பந்தப்படி, இவ்விரு பிள்ளை நிவாரணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

## வாழ்க்கைத் துணைக்கான நிவாரணம் / உடற்குறையுள்ள வாழ்க்கைத் துணைக்கான நிவாரணம்

- உங்கள் வாழ்க்கைத்துணையின் ஆண்டு வருமானம் $4,000க்கு மேற்போகாதிருந்தால் $2,000 வரி நிவாரணம் கோரலாம். உங்கள் வாழ்க்கைத்துணைக்கு உடற்குறை இருந்தால் $5,500 வரி நிவாரணம் கோரலாம்.

## உடற்குறையுள்ள சகோதர சகோதரிக்கான நிவாரணம்

- உங்களுடன் ஒரே வீட்டில் வசிக்கும், உங்கள் ஆதரவைச் சார்ந்திருக்கும் உடற்குறையுள்ள ஒவ்வொரு உடன்பிறப்புக்கும் அல்லது வாழ்க்கைத் துணையின் உடன்பிறப்புக்கும் $5,500 வரி நிவாரணம் கோரலாம்.

## வேலை செய்யும் தாய்மாருக்கான பிள்ளை வரி நிவாரணம்

- வேலை செய்யும் தாய்மார்கள் (திருமணமானவர்கள், விவாகரத்தானவர்கள் அல்லது துணையை இழந்தவர்கள்) பிள்ளையின் பிறப்பு வரிசையைப் பொறுத்து, ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது வருமானத்தில் 15% முதல் 25% வரை வரி நிவாரணம் கோரலாம்.
- இந்த நிவாரணத்துடன் தகுதிபெறும் பிள்ளை / உடற்குறையுள்ள பிள்ளை நிவாரணத்தையும் சேர்த்து, ஒவ்வொரு பிள்ளைக்கும் அதிகபட்சம் $50,000 நிவாரண வரம்பு உள்ளது.
- தனிநபர் வருமான வரி நிவாரணத்திற்கு $80,000 வரம்பு உள்ளது.



உள்ளடக்கப் பக்கத்திற்குத் திரும்பிச்செல்ல அழுத்துங்கள்

## போர்க்காலப் படைவீரர் நிவாரணம் (தனக்கு, மனைவிக்கு, பெற்றோருக்கு)

- போர்க்காலப் படைவீரர்களுக்கு $1,500 முதல் $5,000 வரையிலான வரி நிவாரணமும், மனைவிக்கும் பெற்றோருக்கும் $750 வரி நிவாரணமும் கிடைக்கும்.




## வருமான நிவாரணம்

- வயதையும் முந்திய ஆண்டில் ஈட்டிய வரிவிதிப்புக்குரிய வருமானத்தையும் பொறுத்து, ஊழியர்கள் $1,000 முதல் $8,000 வரையிலான நிவாரணம் பெறுவார்கள்.
- அதேபோல, வேலை செய்யும் உடற்குறை உள்ளவர்களுக்கு $4,000 முதல் $12,000 வரை நிவாரணம் கிடைக்கும்.

** நிவாரணம் கோருவோர் அதனைப் பகிர்ந்துகொள்ளலாம்.*

## பயிற்சிக் கட்டண நிவாரணம்

- திறன்களையும் வேலைத்தகுதியையும் மேம்படுத்திக் கொள்வதற்காகப் பங்கெடுத்த பயிற்சி வகுப்புகளுக்கு வரி நிவாரணம் கிடைக்கும்.
- நீங்கள் எத்தனை பயிற்சி வகுப்புகள், ஆய்வரங்குகள் அல்லது மாநாடுகளில் பங்கெடுத்திருந்தாலும், ஓர் ஆண்டில் அதிகபட்சம் $5,500 வரையிலான பயிற்சிக் கட்டணத்திற்கு வரி நிவாரணம் கோரலாம்.

**சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்: 1800 356 8300**
**www.iras.gov.sg**

## மத்திய சேம நிதி ரொக்க நிரப்புத்தொகைக்கு நிவாரணம்

- உங்களுடைய அல்லது உங்கள் அன்புக்குரியவர்களுடைய மத்திய சேம நிதி சிறப்பு / ஓய்வுக்காலக் கணக்கிலும் மெடிசேவ் கணக்கிலும் பணம் நிரப்புவதற்குக் கிடைப்பது.
- ஒவ்வோர் ஆண்டும் $14,000 வரையிலான நிவாரணம் பெறலாம் (தனக்கு அதிகபட்சம் $7,000, குடும்ப உறுப்பினர்களுக்கு அதிகபட்சம் $7,000).
- 1 ஜனவரி 2022 முதல், ஆண்டுக்கு $16,000 வரை நிவாரணம் பெறுங்கள் (சொந்தக் கணக்கில் பணம் நிரப்புவதற்கு அதிகபட்சம் $8,000, அன்புக்குரியவர்களின் கணக்குகளில் பணம் நிரப்புவதற்கு அதிகபட்சம் $8.

## மத்திய சேம நிதி நிவாரணம்: தன்விருப்பப்படியான மெடிசேவ் சந்தா

- பின்வருபவற்றில் ஆகக் குறைவானதற்கு வரி நிவாரணம் அளிக்கப்படும்:
  - மெடிசேவ் கணக்கில் தன்விருப்பப்படி செலுத்தும் சந்தா; அல்லது
  - ஊழியர்/முதலாளி செலுத்தும் கட்டாய சந்தாவைக் கழித்தபின், ஓர் ஆண்டில் செலுத்திய மத்திய சேம நிதி சந்தா; அல்லது
  - தன்விருப்பப்படியான ரொக்கச் சந்தா செலுத்துவதற்குமுன் மெடிசேவ் கணக்கில் இருக்கும் இருப்புத்தொகைக்குக் குறைவான நடப்பிலுள்ள அடிப்படை சுகாதாரப் பராமரிப்புத் தொகை

## ஆயுள் காப்புறுதி நிவாரணம்

- ஊழியரின் மத்திய சேம நிதி சந்தா, சொந்தத் தொழில் செய்வோரின் மெடிசேவ் / தன்விருப்பப்படியான மத்திய சேம நிதி சந்தா, தன்விருப்பப்படி மெடிசேவ் கணக்கில் ரொக்கமாக நிரப்பும் சந்தா ஆகியவற்றின் மொத்தத் தொகை 2020ல் $5,000க்கும் குறைவாக இருப்போருக்கு இந்த நிவாரணம் கிடைக்கும்.
- இரண்டில் குறைவானதற்கு நிவாரணம் கோரலாம்:
  - $5,000க்கும் உங்களது மத்திய சேம நிதி சந்தாவுக்கும் இடையிலான வேறுபாடு; அல்லது
  - உங்களுடைய / உங்கள் வாழ்க்கைத் துணையுடைய ஆயுள் காப்புறுதியின் மதிப்பில் அதிகபட்சம் 7%, அல்லது செலுத்தப்பட்ட காப்புறுதி சந்தாத் தொகை.
- If a married man paid for the life insurance policy for his wife, he may also claim the insurance premiums on his wife's life insurance policy.

# பயனுள்ள தொடர்பு எண்கள்

| | | |
|---|---|---|
| **CPFB** (மத்திய சேம நிதிக் கழகம்)<br>• வேலைநலன் துணை வருமானத் திட்டம் | 1800 227 1188 | www.cpf.gov.sg<br>www.workfare.gov.sg |
| **e2i**<br>(வேலை நியமன, வேலைத்தகுதி கழகம்) | 6474 0606 | www.e2i.com.sg |
| **ESG** (எண்டர்பிரைஸ் சிங்கப்பூர்) | 6898 1800 | www.enterprisesg.gov.sg |
| **IMDA** (தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம்) | 6377 3800 | www.imda.gov.sg |
| **IRAS** (சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம்) | 1800 356 8300 | www.iras.gov.sg |
| **MOH** (சுகாதார அமைச்சு)<br>• மெடிஷீல்டு லை்ப் | 6325 9220<br>1800 222 3399 | www.moh.gov.sg<br>www.medishieldlife.sg |
| **MOM** (மனிதவள அமைச்சு) | 6438 5122 | www.mom.gov.sg |
| **MSF** (சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு) | 6355 6388 | www.msf.gov.sg |
| என்டியுசி (தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ்) கற்றல் மையம் | 6336 5482 | www.ntuclearninghub.com |
| எஸ்ஜி எனேபல் எனும் இயலாமை உள்ளோருக்கான நல்வாழ்வு நிலையம் | 1800 8585 885 | www.sgenable.sg |
| **SSG** (ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர்) | 6785 5785 | www.skillsfuture.sg |
| டிரான்சிட்லிங்க் | 1800 225 5663 | www.transitlink.com.sg |
| **WSG** (சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு) | 6883 5885 | www.wsg.gov.sg |
| • எஸ்ஜி ஒற்றுமை வேலைகள், திறன்களுக்கான திட்டம் | | www.wsg.gov.sg/SGUnited.html |
| • எஸ்ஜி ஒற்றுமை வேலைப் பயிற்சித் திட்டம் | | www.sgunitedtraineeships.gov.sg |
| • எஸ்ஜி ஒற்றுமை இயக்கத்தின் பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள் | | www.go.gov.sg/wsg-sgup-trainees |
| • வேலைநலன் திறன் ஆதரவுத் திட்டம் | 1800 536 8333 | www.workfare.gov.sg |

இத்தகவல் மக்கள் கழகத்தின் மக்கள் மற்றும் அரசாங்க ஈடுபாட்டுப் பிரிவால் தொகுக்கப்பட்டது.
மேல்விவரம் அறிய, தயவுசெய்து மேற்காணும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

People's Association